உ

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் துணை



திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம்

## அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான இனாம்சமயபுரம், அருள்மிகு ஆதிமாரியம்மன் திருக்கோயில்

# ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்

**அருள்மிகு விநாயகர் துதி**

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

**அருள்மிகு ஆதி மாரியம்மன் துதி**

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம் எனக்கு உள்ளம் எல்லாம்
அன்றே உனது என்று அறிந்து விட்டேன் அழியாத குணக்
குன்றே, அருட்கடலே, இமவான் பெற்ற கோமளமே

**அருள்மிகு முருகன் துதி**

அப்பன் நீ அம்மை நீ அய்யனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரூக நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

*அன்புடையீர், வணக்கம்.*

பாரத தேசத்தில் தென் திசையில் காவிரி பாய்ந்தோடும் ஈசான பாகத்தில் கண்ணனூர் என்னும் சமயபுரத்தில் வீற்றிருக்கும் ஆயிரம் கண்ணுடையாள் என்று அழைக்கப்படும் சமயபுரம், அருள்மிகு சமாரியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான இனாம் சமயபுரம் அருள்மிகு ஆதிமாரியம்மன் திருக்கோயிலில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலின் ப்ரம்மோற்சவம் 8-ம் திருநாள் அன்று அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் எழுந்தருளி வருகிறாள். அதை மையமாக கொண்டு அவ்விடத்தில் இருந்த பழைய கோயிலை புதுப்பித்து திருப்பணிகள் நிறைவுபெற்று அருள்மிகு ஆதிமாரியம்மன், விநாயகர், தண்டபாணி, நாககன்னியம்மன், வெக்காளியம்மன் மற்றும் கருப்பண்ணசாமி ஆகிய தேவதைகளுக்கு திருக்குடமுழுக்கு மஹாமாரி கிருபைக் கொண்டு நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் வைகாசி மாதம் 18ஆம் தேதி **(01-06-2017) வியாழக்கிழமை** சப்தமி திதி, மக நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.30 மணிக்குமேல் 8.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளவாறு நடைபெற உள்ளது. அது சமயம் பக்தகோடி பெருமக்கள் அனைவரும் திருக்குடமுழுக்கு பெருவிழாவில் கலந்துகொண்டு அருள்மிகு ஆதிமாரியம்மன் திருவருளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| நாள் | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| 29.05.2017<br>வைகாசி -15<br>திங்கட்கிழமை | காலை 9.01 மணி முதல்<br>10.30 மணி வரை | தேவதானுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, கணபதி ஹோமம், நவக்ரஹஹோமம்,<br>லக்ஷ்மி ஹோமம், திரவ்யாஹுத்தி, பூர்ணா ஹுதி, தீபாராதனை பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 5.00 மணி முதல்<br>8.00 மணி வரை | விக்னேஷ்வர பூஜை, ரக்ஷோக்ண ஹோமம், வாஸ்து சாந்தி,<br>தீபாராதனை பிரசாதம் வழங்குதல் |
| 30.05-2017<br>வைகாசி -16<br>செவ்வாய்கிழமை | காலை 8.00 மணி முதல்<br>10.30 மணி வரை | விக்னேஷ்வர பூஜை, தீர்த்தசங்கிரஹணம், மிருத்சங்கிரஹணம், அக்னிசங்கிரஹணம்,<br>தீபாரதானை பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 5.00 மணி முதல்<br>9.00 மணி வரை | விக்னேஷ்வர பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம்,<br>யாகசாலை ப்ரவேசம், கடஸ்தாபனம், முதல் கால யாகபூஜை துவக்கம், திரவ்யாஹுதி<br>பூர்ணாஹுதி, தீபாராதனை பிரசாதம் வழங்குதல். |
| 31.05.2017<br>வைகாசி 17<br>புதன்கிழமை | காலை 9.01 மணி முதல்<br>10.30 மணி வரை | விக்னேஸ்வர பூஜை, இரண்டாம் காலயாகபூஜை, துவக்கம் திரவ்யா ஹுதி, பூர்ணாஹுதி,<br>தீபாராதனை பிரசாதம் வழங்குகுதல் |
| | மாலை 5.00 மணிமுதல்<br>9.00 மணிவரை | விக்னேஷ்வர பூஜை, மூன்றாம் காலயாகபூஜை துவக்கம் திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி,<br>தீபாராதனை பிரசாதம் வழங்குதல் |
| 01.06.2017<br>வைகாசி 18<br>வியாழக்கிழமை | காலை 5.00<br>6.45<br>7.15<br>7.45<br>8.15 | விக்னேஸ்வர பூஜை, நான்காம் காலயாகபூஜை துவக்கம் நாடி சந்தனம் ஸ்பர்சாஹுதி, திரவ்யா ஹுதி<br>பூர்ணாஹுதி, தீபாராதனை<br>யாத்ராதானம் உடன் கடங்கள் புறப்பாடு<br>ஆதிமாரியம்மன் விமானம் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம்<br>அருள்மிகு ஆதிமாரியம்மன் மூலவர் மஹா கும்பாபிஷேகம் தீபாராதனை பிரசாதம் வழங்குதல், |
| | மாலை 5.00 மணிமுதல்<br>8.00 மணி வரை | மஹா அபிஷேகம் தீபாராதனை பிரசாதம்<br>வழங்குதல் அருள்மிகு ஆதிமாரியம்மன் திருவீதி உலா |

**02.06.2017 வைகாசி 19ஆம் தேதி முதல் மண்டலாபிஷேக பூஜைகள் துவக்கம்**

ஸ்ர்வசாதகம் அருள்மிகு மாரியம்மன் ஆலய அர்ச்சகர்கள்
க. ஜம்புநாத சிவாச்சாரியார், வே. மகாதேவ சிவாச்சாரியார், ம. கணேச சிவாச்சாரியார்
க. பிச்சை சிவாச்சாரியார், சிவகாம பாஸ்கரா, செ. சுவாமிநாத சிவம்

கி.ரமணி - மணியம்
மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்

அச்சகத்தின் நிறுவனம்
**S. நாகராஜன்,** சண்முகா டிரான்ஸ்போர்ட்,
உறையூர், திருச்சி

**சி. குமரதுரை,** பி.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்/தக்கார்